
திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ

# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு-2022 (பிரஜோற்பத்தி ஆண்டு) வைகாசித் திங்கள்



தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம்
கெண்டியம்பாக்கத்து ஏரிக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்நடுகல்
கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

காலாண்டிதழ் - 30 ★ ( 1991, மேத் திங்கள் ) ★ விலை ரூ. 1-50
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | வரலாற்றில் கன்னியாகுமரி<br>—மா. செந்தில் செல்வக்குமரன் | ... | 1 |
| 2 | A RARE AND UNPUBLISHED WORK ON PROSODY IN TELUGU<br>—T. Sridharamurthy | ... | 5 |
| 3 | வீரகேரளன் காசு<br>—ஆர். வசந்தகல்யாணி | ... | 8 |
| 4 | மறைந்துபோன சோழர் கால வணிகப் பெருநகரம் மதுராந்தகபுரம்<br>—இல. தியாகராஜன் | ... | 12 |
| 5 | அதிசெயப் பாண்டிய விண்ணகர் எம் பெருமான்<br>—தே. கோபாலன் | ... | 25 |
| 6 | பேரங்கியூர் திருமூலத்தானமுடையார்<br>—கி. ஸ்ரீதரன் | ... | 27 |
| 7 | புரவலன் சேதுபதி<br>—ச. பரணன் | ... | 28 |
| 8 | கன்னிமார் சுனை<br>—ச. கிருஷ்ணமூர்த்தி | ... | 30 |
| 9 | தமிழகத்தின் ஏரிகள்<br>—கொடுமுடி ச. சண்முகம் | ... | 31 |
| 10 | அறமறவேல் அறமல்லது துணையில்லை<br>—கு. தாமோதரன் | ... | 36 |
| 11 | RELATIONSHIP BETWEEN VARIOUS PARAMETERS IN TANK TECHNOLOGY<br>—Kodumudi S. A. Shanmugam | ... | 40 |

திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,

# வரலாற்றில் கன்னியாகுமரி

**மா. செந்தில் செல்வக்குமரன்,**
தொல்பொருள் அலுவலர்.

கன்னியாகுமரி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே புகழ் பெற்ற பெருமைவாய்ந்த இடமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. வெளிநாட்டார் குறிப்புக்களும், பழந்தமிழ் இலக்கியங்களும் இதன் பழமைக்குச் சான்று பகர்கின்றன.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த 'ரெத்ரோதனஸ்' என்ற வெளிநாட்டு அறிஞர் தமது பயண நூலில் குமரியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். 'பெரிப்பிளஸ்' என்னும் வரலாற்று நூல் கி. பி. 85-ஆம் ஆண்டைச் சார்ந்தது. அந்நூல் குமரித் துறையைப் பற்றியும், அங்கு ஆண்களும், பெண்களும் புனித நீராடுவது குறித்தும் குறிப்பிடுகிறது. கி.பி. 150-ஆம் ஆண்டைச் சார்ந்த 'தாலமி' என்ற யவன யாத்திரிகர் தமது வரலாற்றுப் பயண நூலில் குமரியின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். இச்சான்றுகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்க்கின்ற அளவிற்கு கன்னியாகுமரி பெயர் பெற்றுவிட்டதைக் காட்டுகின்றன.

## இலக்கியங்கள்

பழந்தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்கள் குமரி பற்றிய செய்திகளைத் தருகின்றன.

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்து
குமரி கோடும் கொடுங்கடல் கொள்ள

எனச் சிலப்பதிகாரம் வரலாற்றுக்கு எட்டாச் செய்தி ஒன்றைத் தருகிறது. இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியாக இருத்தல் வேண்டும். அக்காலத்திலேயே குமரி புகழ் பெற்றுத் திகழ்ந்திருந்ததை இது காட்டுகிறது.

மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலம் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து

எனச் சிலம்பும்,

பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சித்
தென்றிசைக் குமரி ஆடிய வருவோள்

என மணிமேகலையும் கூறுவதிலிருந்து அக்கால கட்டத்திலேயே குமரிக்கடல் பாவங்களைப் போக்கும் புண்ணிய தீர்த்தமாகக் கருதப்பட்டது வெளிப்படுகிறது.

## புராணம்

புராணச்சான்று குமரியையும், குமரித் தெய்வத்தையும் இராமர் காலத்திற்கும் முற்பட்டதாகத் தெரிவிக்கின்றது. இராமன் இலங்கையையும், தமிழகத்தையும் இணைக்கப் பாலத்தைக் கட்டு வதற்கு முன்பு கன்னியாகுமரி தெய்வத்திடம் வேண்டி அருள் பெற்றதாகக் கன்னியாகுமரித் தலபுராணம் எடுத்து இயம்புகிறது. அந்நாள் முதற்கொண்டு இத்தலம் 'ஆதிசேது' என்னும் பெயர் பெற்றதாகக் கூறுவர். கன்னியாகுமரியில் தீர்த்தமாடுகிறவர்கள்,

"ஆதிசேதோ கன்னியாகுமரி சேத்ரே
மாத்ரு பித்ரு தீர்த்தே"

எனக்கூறி புனித நீரில் மூழ்குகிறார்கள்.

## கல்வெட்டுக்கள்

கன்னியாகுமரி அமைந்திருந்த நாட்டின் பெயர் தொடக்க காலத்தில் புறத்தாய நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு சோழர் காலம் முதல் 'இராஜராஜ வளநாட்டுப் புறத்தாய நாடு' என்றும், 'இராஜராஜ பாண்டிநாட்டு உத்தமச்சோழ வளநாட்டு புறத்தாய நாடு' என்றும், 'தென் வாரணவாசி நன்னாடு' என்றும் பல பெயர்களால் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் காட்டு கின்றன.

கன்னியாகுமரிக்கு ‘குமரி’ என்பதே பழம் பெயராகும். பின்பு காலப்போக்கில் இப்பெயர் பல்வேறு மாற்றத்திற்கு ஆட்பட்டுள்ளது என்பதைக் கல்வெட்டுக்களால் அறியமுடிகிறது. முதலாம் இராசராசன் கல்வெட்டு இதனை ‘குமரி மங்கலம்’ எனக் குறிப்பிடுகிறது. முதலாம் இராசேந்திரன் கல்வெட்டு ஒன்று ‘கழிக்குடி’ என்று கூறுகிறது. இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டு ‘குமரிக்கழிக்குடி’ எனச் சுட்டுகிறது. இரண்டாம் இராசேந்திரனின் மற்றொரு கல்வெட்டு ‘குமரியான கங்கை கொண்ட சோழபுரம்’ எனச் சோழநாட்டுத் தலைநகரின் பெயரைச் சுட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

முதன்முதலாக விஜயநகர மன்னன் இராமராயரின் கல்வெட்டுத் தான் இவ்வூரினை ‘கன்னியாகுமரி என்று குறிப்பிடுகிறது. தேவியின் பெயர் ‘கன்னியாபடாரி’ என்பதாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. தேவியின் பெயரும், பழைய ஊர்ப்பெயரும் இணைந்தே ‘கன்னியாகுமரி’ என்ற புதுப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுவே இவ்வூருக்கு நிலைத்துவிட்டது.

## கோயில்கள்

இவ்வூரில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் ‘பகவதி கோயில்’ குகநாதேஸ்வரர் கோயில், காசிவிசுவநாதர்கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கக் கோயில்களாகும்.

கன்னியாபகவதி கோயில் தேவிக்கென அமைக்கப்பட்ட கோயிலாகும். இது கன்னியாகுமரிக் கடற்கரையையொட்டி அமைந்துள்ளது. இஃது உரிய கட்டடக்கலை அமைதியுடன் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட பழங்கோயிலாகும்.

கருவறையில் தேவி நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். மூக்கில் அழகிய வைர மூக்குத்தி அணி செய்கிறது. பாண்டியர், சோழர், விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுக்கள் இங்கு உள்ளன.

குகநாதேஸ்வரர் கோயில், கல்வெட்டுக்களில் ‘இராஜராஜ ஈஸ்வரமுடையார்’ என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. இது கன்னியாகுமரி புகைவண்டி நிலையம் அருகில் அமைந்துள்ளது. இங்கு சோழர் காலத்து கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவற்றுள்

பழமையானது முதலாம் இராசேந்திரன் கல்வெட்டாகும். இம்மன்னன் காலத்திலேயே இக்கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் எனலாம். தஞ்சைப் பெருங்கோயிலின் இறைவன் பெயராகிய 'இராசராச ஈஸ்வரமுடையார்' என்பதனையே இவ் விறைவனும் பெற்று விளங்குகிறார். தஞ்சைப் பெரியகோயிலின் அமைப்பிலேயே அமைக்கப்பட்ட ஒரு சிறுகோயிலாக இது காட்சி தருகிறது.

காசிவிசுவநாதர் கோயில் விவேகானந்தாகேந்திரா எதிரில் அமைந்துள்ளது. இங்கும் கல்வெட்டுக்கள் சில உள்ளன. ஆனால் பழைய கல்வெட்டு எதுவும் காணப்படவில்லை. இது சமணக்கோயிலாக இருந்து சிவன்கோயிலாக மாற்றப்பட்டதாகக் கூறுவர்.

குகநாதேஸ்வரர் கோயில் கல்வெட்டுக்கள் சில அவ்வூரில் பல நற்பணிகள் செய்யப்பட்டதைக் கூறுகின்றன. அவற்றை இனிக் காணலாம்.

### சாலை

காந்தளூர்ச்சாலை போன்று கன்னியாகுமரியிலும் ஒரு சாலை இருந்துள்ளது. இச்சாலை பற்றிய செய்தியினை முதலாம் இராசாதிராசனின் கல்வெட்டொன்று தருகிறது. அக்கல்வெட்டு அச்சாலையினை 'ஸ்ரீ வல்லவப் பெருஞ்சாலையான இராஜராஜப் பெருஞ்சாலை' என்ற பெயரால் சுட்டுகிறது. இராசாதிராசன் சேரலன் சாலையை கைப்பற்றியவன். ஆதலால் அதன் நினைவாக இவ்விராசராசன் சாலைக்கு மணற்குடி உப்பளத்திலிருந்து உப்பு வழங்க ஆணையிட்டுள்ளான் எனலாம்.

### தண்ணீர்ப்பந்தல்

சோழ அரசனின் அமைச்சன் ஐயனம்பி என்பவன் கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் கன்னியாகுமரியில் தண்ணீர்ப்பந்தல் ஏற்படுத்தியதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அதற்கு 'ஜெயங்கொண்ட சோழன் தண்ணீர்ப்பந்தல்' என்பது பெயராகும். தண்ணீர்ப்பந்தலில் பணி புரிவோர்க்கு ஊதியமாக நெல்லினையும் இம்மந்திரி தானமாக வழங்கி உள்ளான்.

# A RARE AND UNPUBLISHED WORK ON PROSODY IN TELUGU

**T. Sridharamurthy,**
Telugu Pandit (Retd.),
Govt. Oriental Manuscripts Library, Madras-600 005.

This is a palm leaf manuscript in Telugu language and is available under R. No. 631 in the Government Oriental Manuscripts Library. Its title is *Sakala Lakshana Sara Sangraha Chintamani*. It has three chapters and is a complete work. Poet Venkata Reddi composed it. His father's name is Venkataraya. They belong to Uppuluri Vamsa. Both father and son have the same name. But in the son's name, the word *Reddi* is added. The word Reddi generally denotes caste name. But at the colophon of the manuscript the poet is referred to as belonging to the Apasthamba Sutra and Kasyapa Gotra. Hence the poet is a Brahmin. In Andhra Pradesh the word *Reddi* denotes not only a caste name, but the title of the name of a village chief. Hence the suffix *Reddi* may denote that the poet held a position of authority, that of a village chief.

**Date of the Poet**

In the manuscript, there is no sufficient evidence to know the date of the poet. However, there is an internal evidence. It is this to Lord *Dupleix*, the Governor of Pondicherry, there was a Dubash by

name Ananda Rangam Pillai. Under the later was a poet Kasturi Ranga Kavi from Trichy. He wrote a prosody work on Ananda Rangam Pillai under the title Ananda Rangarat Chandamu and dedicated the work to his master. Some verses from this work are incorporated in this work as quotations. Hence it goes without saying that Sakala Lakshana Sara Sangraha Chintamani is later to the Ananda Rangarat Chandamu. The date of Anandarangam Pillai is 1709-1776 A. D. Hence this work must have been written in the last quarter of 18th century.

**Formation of the Work**

Works on prosody cannot be composed with ease like other literary works. Such works on prosody were written following the pattern set by ancient authors and of course adding a few new details. Likewise this work too has followed the tradition of ten previous works on prosody. The ten works are as follows:

1. Uttamaganda Chandas
2. Adharvana Chandas
3. Hanumat Chandas
4. Ananta Chandas
5. Kavirakshasa Chandas
6. Jayadeva Chandas
7. Sridhara Chandas
8. Gokarna Chandas
9. Nilakantha Chandas
10. Bhimana Chandas

As the present work has succinctly adopted the details in these ten works as an epitome of these works, it is titled Sakala Lakshana Sara Sangraha Chintamani.

**The Value of the Work**

Of the ten works mentioned above, leaving one or two, the rest are not available. Nevertheless, excerpts from these unavailable rare works are found in this work. Besides several quotations from rare literary works also find their place here.

For e. g.

| | **Poet's Name** | **Name of the work** |
|---|---|---|
| 1. | Singana | Vamana Puranamu |
| 2. | Mukku Timmana | Vanivilasamu |
| 3. | Allasani Peddana | Harikathasaramu |
| 4. | Nannaya Bhattu | Laksanasaramu |

Thus, this work, having been composed, based on earlier ten works, has its value enhanced. This will be one more added necklace to the goddess of learning if it is brought to light in printed form.

—

# வீரகேரளன் காசு

(சென்ற இதழின் தொடர்ச்சி)

இரண்டாம் மாறவர்மன் விக்ரமபாண்டியன், முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன் ஆகியோர் கேரள நாட்டின்மேல் செலுத்திய ஆதிக்கத்தை மனதில் கொண்டு நேரத்தை எதிர்நோக்கி இருந்த சேர மன்னனுக்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்தது. சேரமன்னன் (திருவாங்கூர்) இரவிவர்மன் குலசேகரன் பாண்டிய நாட்டைத் தாக்கிக் காஞ்சி வரை சென்றான். திருச்சி, சேலம், தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்கள் இம்மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டன. திருவதிகை, (தென்னார்க்காடு மாவட்டம்) (34/1903) திருவரங்கம் (22 கல்வெட்டுகள்) திருப் பைஞ்ஞீலி, (திருச்சி மாவட்டம்) (172/1939) சிதம்பரம், (தென்னார்க்காடு மாவட்டம்) 350/1913 காஞ்சிபுரம் 477, 480, 34/1890 பூந்தமல்லி 34/1911 வழுவூர் (செங்கற்பட்டு மாவட்டம்) 54/1908, திருக்குறுங்குடி 352/1960, திருநெல்வேலி (77/1927) ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன. கி.பி. 1313 முதல் 1316 வரை காவிரி ஆற்றுக்கு வடக்கே உள்ள நிலப்பகுதி முழுதும் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. திருவரங்கம், காஞ்சிபுரம், திருவதிகைக்[8] கல்வெட்டுகளில் இரவிவர்மனாகிய சங்கிராமதீர குலசேகர தேவன் சந்திர குலத்தைச் சேர்ந்த கேரள மன்னன் ஜெயசிம்மனுடைய மகன் என்றும், இவன் மனைவி உமாதேவி என்றும், எதிரிகளை ஒழித்துவிட்டு அரசாட்சியில் அமர்ந்தான் என்றும் வீரபாண்டியனைத் தோற்கடித்தான், வேகவதி ஆற்றங்கரையில் முடிசூடிக் கொண்டான் என்றும், வீர பாண்டியனைக் கொங்கானத்திற்கு அப்பால் துரத்திவிட்டு, வடபகுதி முழுவதையும் வெற்றி கொண்டான் என்றும், அவனுடைய நாலாவது ஆட்சியாண்டில் காஞ்சிபுரத்தில் இருந்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இங்குதான் நாம் வரலாற்றை கவனமாகப் பார்க்க வேண்டும். இடைக்கால வரலாற்றில் வட

எல்லை வரை வெற்றியை நிறுவிய ஒரே சேரமன்னன் இரவிவர்ம னாகிய சங்கிராமவீரன் அல்லது திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவன். இம்மன்னன் கி.பி. 1310-இல் பட்டத்திற்கு வந்தவன். (திருவடி 34/1903, வழுவூர் 54/1908) இம்மன்னன் வீரபாண்டி யனைத் தோற்கடித்த செய்தியைக் காஞ்சிபுரம் கல்வெட்டு தெரிவிக்கிறது (E.I. vol. IV pages 145 to 152). இம்மன்னன் காலத்த தாகிய பூந்தமல்லிக் கல்வெட்டு சுந்தரபாண்டியனை வென்று சேர பாண்டிய சதுர்வேதிமங்கலம் என்ற ஊரை ஏற்படுத்தியதைக் குறிக்கிறது. திருவனந்தபுரம் சாலிகிர்ராமத்தில் உள்ள கல்வெட்டில் வடமொழிப் பகுதி மன்னனின் விருதுகளைச் சொல்கிறது. தமிழ்ப்பகுதி இவனை மாறவர்மன் திருபுவன சக்கரவர்த்தி ஸ்ரீகுல சேகர தேவர்[9] என்கிறது, இந்த மாறவர்மன் என்ற பட்டம்தான் அனைத்துக் கல்வெட்டுகளையும் இரண்டாம் மாறவர்மன் குலசேகர னுடையது (கி.பி. 1314) என்று எண்ண வைத்தது. சுமார் 22 கல்வெட்டுகள் பாண்டியன் இரண்டாம் மாறவர்மன் குலசேகர னுடையவையாகக் குறித்தனர். ஆனால் கல்வெட்டின் உள்ளே அமைந்த செய்திகளைக் கொண்டு இக்கல்வெட்டுகள் இரவிவர்மன் குலசேகரனுடையவை என்று தெளிவாக[10] நிறுவப்பட்டுவிட்டது. காஞ்சிபுரம் கல்வெட்டு ஒன்று[11] அனந்த நாராயணனான சுந்தர பாண்டிய காலிங்கராயன் என்பவன் தன் பெயரில் சுந்தரபாண்டிய காலிங்கராயன் சந்தி என்றும் தன் மன்னன் பெயரில் வீரகேரளன் சந்தி என்றும் இரண்டு சந்திகளை ஏற்படுத்தி நிவந்தம் அளித்ததைத் தெரிவிக்கிறது திருவரங்கத்து சுந்தரபாண்டியனாகிய கோதண்ட ராமன் கல்வெட்டில் இதே அதிகாரி சுந்தரபாண்டிய காலிங்கராயன் என்றும், காஞ்சிபுரம் கல்வெட்டில் அனந்தநாராயணனாகிய சுந்தரபாண்டிய காலிங்கராயன் என்றும் குறிக்கப்படுதல் காண்க. இவ்வாறு சுமார் இருபத்து இரண்டு கல்வெட்டுகள் இரவிவர்மன் குலசேகரனுடையதாகி, அவனுடைய வடபக்க ஆட்சியின் பலத்தை நமக்குக் காட்டுவதாக உள்ளது.

குலசேகர பாண்டியனின் புதல்வர்கள் வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும் காகதீய மன்னன் பிரதாபருத்திர தேவனின்

உதவியுடன் சிலகாலம் கழித்து கேரள வீரபாண்டியனைத் தோற்கடித்தனர். காஞ்சிபுரம் கேரள மன்னன் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது.

இந்தக் குறுகியகால வரலாற்றைப் பார்த்தோமானால் இரவிவர்ம குலசேகரன், சிறிது காலமானாலும் வடதமிழ் நாடு வரை அடிமைப்படுத்தியிருக்கிறான் என்பது புலனாகிறது. ஆக, வீரகேரளன் காசு மேற்குறித்த இரவிவர்மனுடையதே என்று கொள்வதே பொருத்தமாகும்.

மேலும், பூந்தமல்லியில் உள்ள கல்வெட்டொன்று இவன் காலத்தது தன்னிடம் தோற்று, பின்னர் இவனுடைய மேலாதிக்கத்தை ஒத்துக்கொண்டு மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த மாறவர்மன் குலசேகரனின் பெயரன் கோதண்டராமனாகிய சுந்தர பாண்டியன் சேரமன்னனோடு நல் இணக்கம் கொண்டதன் அடையாளமாகச் சேரபாண்டிய சதுர்வேதிமங்கலம்[12] என்று பெயரிட்டு ஓர் ஊரைச் சர்வமானியமாகக் கொடுத்ததைக் கூறுகிறது. இங்கு, குறிக்கத்தக்க செய்தி என்னவென்றால் இக்கல்வெட்டில் மீன் சின்னமும், அதன் மேல் அங்குசமும் வெட்டப்பட்டுள்ளது. மீன் பாண்டியர்களின் சின்னம். அப்பாண்டியர்களை அடக்கியாளும் அங்குசம் போன்றவன் என்ற பொருளில் மீனுக்குமேல் அங்குசம் காணப்படுகிறது. எனவே, அங்குசம் கேரள மன்னனோடு தொடர்புடையதாகிறது. ஆக, ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காசிலும் கண்டராங்குசஸ்ய (கண்டர்களுக்கு அங்குசம் போன்றவன் என்று பொருள்) என்று உள்ள வாசகத்திற்கும் கேரளன் இரவிவர்மனுக்கும் இருக்கும் தொடர்பு வெளிப்படை. எனவே, கண்டராங்குசன் வீரகேரளன் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றித் தன்னாதிக்கத்தில் வைத்திருந்த இரவிவர்மன் குலசேகரனே; காசினை வெளியிட்டவனும் அவனே என்று கொள்வதே பொருத்தமாகும்.

## அடிக்குறிப்புகள்


1 Rapson - Indian Coins, Pl.v.ii

2 Brown C. Coins of India, Pl.vii-9

3 Nagaswamy R. Dr Tamil Coins a study, 1981 - Page-15

4 Brajadulal Chattopadhyaya, Coins and currency systems in South India (C. A. D. 225 - 1300) Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., Page 278 No. 332.

5 Nagaswamy R. Dr. Tamil Coins - a study, 1981 Page - 15.

6 Vidya Prakash, Coinage of South India, An Introductory Survey, The Numismatic Society of India 1968.

7 Lakshminarayana Rao, N.M.A., J.N S.I. Vol. IX, Part II.

8 Kielhorn E.g. IV Pages 143 and 148 Hultysch E.g. VIII Page-8.

9 Travancore Archaeological series Vol. II Page-58.

10 Sethuraman. N. Article - Dr. G. S. Gai Felicitation Volume.

(மாறவர்மன் குலசேகரன், இரவிவர்மன் குலசேகரன் ஆகியோருடைய கல்வெட்டுகளை மிகச் சிறப்பாக ஆராய்ச்சி செய்து திருவரங்கம் கல்வெட்டுகளில் சுமார் 22 கல்வெட்டுகள் இரவிவர்மன் குலசேகரனுடையதே என்று தெளிவாகக் கூறிய பெருமை இவரையே சாரும். ஆய்வுக்குரிய வீரகேரளன் காசு இரவிவர்மன் குலசேகரனுடையதாக இருக்கலாம் என்ற கருத்துக்கு வலிமை சேர்த்ததும் திரு. சேதுராமன் அவர்களுடைய திருவரங்கம் கல்வெட்டுகள் பற்றிய சிறப்பான ஆய்வேயாம்.)

11 477 of 1909.

12 33 of 1911

# மறைந்துபோன சோழர் கால வணிகப் பெருநகரம் மதுராந்தகபுரம்

**இல. தியாகராஜன்,**
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி, அரியலூர்.

தமிழக வரலாற்றில் பொற்காலம் படைத்தவர்கள் சோழர் ஆவர். காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கிய இக்குடியினரின் ஆட்சியில் வேளாண்மைப் பொருளாதாரம் செழித்தோங்கியது. நாடு முழுவதும் ஆறுகள், ஏரிகள், குளங்கள் அமைத்து வளம் பெருக்கியதைப் போலவே வாணிகத்தையும் இவர்கள் வளரச் செய்தனர். திரைகடல் ஓடி திரவியம் சேர்க்கும் வணிகர்கட்கு என பல நகரங்களை உருவாக்கி வரிகளை நீக்கி வாணிகம் பெருக ஊக்கமளித்தனர். சுங்கமில்லாச் சோழநாடு என்ற பெயரையும் ஏற்படுத்தினர்.

தம் வாணிகத்தால் நாட்டை வளமையடையச் செய்த வணிகர்கள் வாழ்ந்த பெருநகரங்கள் திருச்சி மாவட்டம் அரியலூர் பகுதியில் பல இருந்துள்ளன. மருதையாறு, வெள்ளாறு. கொள்ளிடக் கரைப்பகுதிகளின் நாகரிகம் வளரக் காரணமாயிருந்த இந்நகரங்கள் இன்று மறைந்துபோய் சிற்றூர்களாக மாறிவிட்டன, இருப்பினும் இவ்விடங்களில் எல்லாம் அவர்கள் கட்டிய கோயில்கள், எழுதிய கல்வெட்டுகள், வடித்த சிற்பங்கள் அவர்களின் காலத்துப் பெருமைகளைப் பற்றிப் பேசுகின்றன. வரலாறு படைத்த இவ்வாணிக நகரங்கள் மீது இதுவ்ரை வரலாற்று வெளிச்சம் படாதது நமக்கெல்லாம் பேரிழப்பாகும்.

வரலாற்று ஆய்வாளர்களின் பாதம்படாத இத்தகு நகரங்களில் ஒன்றுதான் மதுராந்தகபுரம்.

## தலைநகர் மாற்றம்

கங்கைவரை படையெடுத்து வென்று தமிழரின் வீரத்தை தலை நிமிர்ந்து நிற்கச் செய்தான் முதலாம் இராசேந்திரன் (1012-1044). தனது வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் என்ற வீரத்திரு நகரையும் அமைத்தான். அங்கு கங்கை கொண்ட சோழீஸ்வரர் என்ற கலைக் கோயிலையும் கட்டினான். மேலும் தஞ்சையிலிருந்த சோழர் தலைநகரத்தையும் இவ்வூருக்கு மாற்றினான்.

## மாற்றம் தந்த ஏற்றம்

இத்தலைநகர் மாற்றத்தினால் அரியலூர் பகுதி சோழத்தலை நகரத்தின் பின்புலமாக மாறி வளம் பெறத் தொடங்கியது. கோட்டைகள், அரண்மனைகள், வணிகப் பெருநகரங்கள், இராணுவத்தளங்கள், எழில் சிந்தும் கலைக் கோயில்கள் போன்றவை புதியதாக இப்பகுதியில் உருவாக ஆரம்பித்தன.

## மருதையாற்றங்கரையில் மாநகரம்

அவ்வாறே மருதையாற்றங்கரையில் மதுராந்தகபுரம் என்ற பெயரில் பெரிய வணிக நகரமொன்றும் தோன்றியது. இங்கு திரைகடலோடி திரவியம் சேர்த்த வணிகர்கள் தேரோடும் பெருந் தெருக்களில் விண்ணைமுட்டும் மாளிகையில் வாழ்ந்தனர். பௌத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் இங்கு சிறப்பாக வளர்ந்தன. கவினுறு கலைக்கோயில்கள் பல எழுந்தன.

ஆனால் இவையனைத்தும் ஆயிரமாண்டுகட்கு முன் நடந்தவை. இன்று அச்சிறப்புகள் எல்லாம் மண்ணிலே மறைந்து போய் விட்டன. இந்நகரம் இரண்டு சிற்றூர்களாய் சிதறிப்போனது. கலைக்கோயில்கள் கவினிழந்து கிடக்கின்றன. காலத்தின் கரம் பட்டு கசங்கிப்போன மதுராந்தகபுரம் எதுவென்றால் அவ்வூர்தான் இன்றைய செட்டித் திருக்கோணம், பெரிய திருக்கோணம் என்ற ஊர்கள்.

அன்றைய பெருமைக்கும் இன்றைய பெயருக்கும் சம்பந்தமே இல்லையே என எண்ணத்தோன்றுகிறதல்லவா? அரியலூர்-விக்கிரமங்கலம் பெருவழியில் அரியலூரிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டரில் அமைந்துள்ள இவ்வூர்களை நாகமங்கலம் வழியாக சென்று அடைய வேண்டும்.

## வரவேற்பு வாயில்

முதலில் அமைந்துள்ள சிற்றூர் செட்டித் திருக்கோணமாகும். ஊருக்குள் நாம் நுழையும்போது நம்மை வரவேற்பது வழியில் ஏரிக்கரை ஓரம் இடிந்துபோய் முட்புதர்களையேத் திருச்சுற்று மாளிகையாய் கொண்டு நிற்கும் இரணேசுவரர் கோயில் ஆகும். காணும் கலை உள்ளங்களை ரணமாக்கும் இக்கோயிலைக் கண்டு பின் சற்று எட்டி நடந்தால் நாம் நிற்பது பெரியதிருக்கோணம் ஆகும். வழியில் நம்மைப் பார்த்து சிரிப்பவை அழகிய சமண தீர்த்தங்கரர், புத்தர் சிலைகள் ஆகும். சற்று தள்ளி ஆதிமத்யார் ஜீனேசுவரர் கோயில் நிற்கிறது. அதன் மேற்கே சௌந்தர பெருமாள் கோயில் உள்ளது. இதன் தென்மேற்கே உத்தண்ட சாத்தனார் கோயில் உள்ளது. இவை அனைத்தும் அழிந்து கொண்டிருக்கும் கலைக் காவியங்கள் ஆகும். வீழும் நிலையிலும்கூட பெருமாள் கோயிலின் தெற்குமதில் சுவர் இவ்வூர் பள்ளிக்கூட கட்டடத்தின் ஒரு பகுதியாகப் பயன்படுகிறது.

## கல்வெட்டுகள்

செட்டித் திருக்கோணம் கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. ஒன்று துண்டுக் கல்வெட்டு ஆகும். மற்றொன்று முதலாம் இராசராசனின் *(1018-1053) 31*-ஆவது ஆண்டில் *(1049)* எழுதபெற்றது ஆகும். ஆதிமத்யார்ஜீனேசுவரர் கோயிலில் எட்டு கல்வெட்டுகள் உள்ளன. அவை இரண்டாம் இராசேந்திரன் *(1055)*, முதலாம் குலோத்துங்கன் *(1081)*, விக்கிரம சோழன் *(1127)*, மூன்றாம் குலோத்துங்கன் *(1195)*, மூன்றாம் இராசேந்திரன் *(1274)*, முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் *(1341)*, கிருட்டிண தேவராயர் *(1517)* ஆகிய மன்னர் காலத்தவை,

சௌந்தரபெருமாள் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. இவை அதிராசேந்திரன் (1070), முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன் (1050), இரண்டாம் சடாவர்மன் விக்கிரம பாண்டியன் (1348) ஆகிய மன்னர்களுடையவை. இவை தவிர மருதாற்று ஓரம் ஒரு நிலத்தில் அரியலூர் பாளையக்காரர் விசைய ஒப்பிலாத மழவராயரின் கல்வெட்டு (1809) உள்ளது. படியெடுக்கப்படாத இப்புதிய கல்வெட்டுகளைப் படியெடுக்கும்படி நடுவணரசு கல்வெட்டுத் துறைக்கு தகவலளிக்கப்பட்டுள்ளது.

### ஊரும் பேரும்

இக்கல்வெட்டுகளில் பழமையானது முதலாம் இராசாதி ராசனுடைய 31-ஆவது ஆண்டு (கி.பி. 1049) கல்வெட்டாகும். இவர் கங்கை கொண்ட சோழர் இராசேந்திரனின் மூத்தமகனாவார். கல்வெட்டுகள் இவ்வூர் பெயரை மதுராந்தகபுரம் என்று கூறுகிறது. மதுராந்தகன் என்பது இராசேந்திரனின் இயற்பெயராகும். எனவே இவர் நினைவாக இப்பெயரில் இவர் மகனுடைய காலத்தில் இவ்வூர் ஏற்பட்டது என அறியலாம்.

### நாட்டுப்பிரிவுகள்

இவ்வூர் "கடாரங்கொண்ட சோழ வளநாட்டு மதுராந்தக வளநாட்டு நகரம் மதுராந்தகபுரம்" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப் பெறுகிறது. இவ்வள நாட்டுப் பெயர்கள் விக்கிரம சோழன் காலத்தில் மாற்றமடைகின்றன. அப்போது "விக்கிரம சோழ வளநாட்டு மண்ணை கொண்ட சோழ வளநாட்டு நகரம் மதுராந்தகபுரம்" என அழைக்கப்பட்டது.

இராசேந்திரசோழன் மண்ணைக் கடக்கம் (மான்யகேதம்) கடாரம் ஆகியவற்றை வென்றதின் நினைவாக மண்ணை கொண்ட சோழன், கடாரம் கொண்ட சோழன் என்ற பெயர்களைப் பெற்றார். இவ்வெற்றியின் நினைவாகக் கொண்ட பெயர்களே இப்பகுதி நாட்டுப் பிரிவுக்கு வைக்கப்பட்டது. இப்பிரிவுகளின் கீழ் இன்றைய உடையார்பாளையம் வட்டத்தின் பெரும்பகுதியும் இருந்தது. இவற்றில் கங்கைகொண்ட சோழபுரமும் ஒன்றாகும்.

## கட்டளை நாடு - கட்டு நாடு

மேலே சொன்ன நாட்டுப் பிரிவுகள் பாண்டியர் காலம் வரையில் மாறாமலிருந்து விசயநகரமன்னர் காலத்தில் மாறி விட்டன. அப்போது இவ்வூர் "திருச்சிராப்பள்ளி உசாவடி கட்டளைநாட்டு வடதுண்டத்து மருதாந்த சோழபுரம்" என அழைக்கப்பட்டது. உசாவடி என்பது விசயநகர காலத்து வருவாய்த்துறைப் பிரிவின் பெயராகும். கட்டளை என்ற பெயருடன் கூடிய பல ஊர்கள் மதுராந்தகபுரத்தைச் சுற்றிலும் இருந்தன. ஆலந்துறையார் கட்டளை, அறக்கட்டளை, வாண்டராயன் கட்டளை, அம்பலவர் கட்டளை, கருப்பிலாக்கட்டளை ஆகியன ஆகும். இதனால் இப்பகுதி கட்டளை நாடு எனப்பட்டது. இப்பெயரே இப்போது மருவி கட்டு நாடு என அழைக்கப்படுகிறது.

## திருக்கோணம்

16-ஆம் நூற்றாண்டுவரை மதுராந்தகபுரம் என அழைக்கப் பட்ட இவ்வூர் எப்போது திருக்கோணம் என்ற பெயரைப் பெற்றது என அறிய முடியவில்லை. ஆனால் கி.பி. 1809-இல் எழுதப்பெற்ற அரியலூர் விசைய ஒப்பிலாத மழவராயரின் கல்வெட்டில் செட்டித் திருக்கோணம் என்ற பெயர் குறிப்பிடப் பெறுகிறது.

திருக்குன்றம் என்ற பெயர் இவ்வூருக்கு இருந்து அப்பெயரே திருக்கோணம் என மாறியது என்றும் செட்டியார்கள் அதிகம் வாழ்ந்தபகுதி செட்டித் திருக்கோணம் என அழைக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

## இரணசிங்க ஈசுவரம்

இன்று செட்டித் திருக்கோணத்தில் இடிந்துபோயுள்ள சிவன் கோயில் இரணேசுவரர் கோயில் எனப்படுகிறது. ஆனால் இங்குள்ள முதலாம் இராசாதிராசனின் 31-ஆவது ஆண்டு கல்வெட்டு (1049) இக்கோயிலை இரணசிங்க ஈசுவரம் என்று கூறுகிறது. இராசேந்திரசோழன் வடநாட்டின் மீது படையெடுத்து வென்ற நாடுகளுள் இலாடதேசமும் ஒன்றாகும். இதனை இரணசூரன்

என்ற மன்னர் ஆண்டு வந்தார். இவரைத் தோற்கடித்து வென்றதன் நினைவாக இரணசிங்கன் (போர்க்களத்தில் சிங்கம் போன்றவன்) என்ற விருதை இவர் பெற்றார் எனலாம். இப்பெயரில் கட்டப்பட்டதே இரணசிங்க ஈசுவரம் ஆகும். இக்கோயில் இம்மன்னனின் காலத்தில் (கி.பி. 1049-இல்) கட்டப் பெற்றதாகும்.

## மதுராந்தகஈசுவரம்

பெரிய திருக்கோணத்திலுள்ள சிவாலயத்துக் கல்வெட்டுகள் இக்கோயிலை ஸ்ரீ மதுராந்தக ஈசுவரம் என்று குறிப்பிடுகிறது. இப்பெயரே மருவி தற்போது ஆதிமத்யார் ஜீனேசுவரர் என அழைக்கப்படுகிறது. இராசேந்திரசோழரின் இயற்பெயர் மதுராந்தகன் என்பதாகும். இவர் பெயரில் இக்கோயில் அழைக்கப் பட்டது. இக்கோயிலில் எழுதப்பெற்றுள்ள எட்டு கல்வெட்டுக்களில் பழமையானது இரண்டாம் இராசேந்திரனுடைய 3-ஆவது ஆண்டு (கி.பி. 1055) கல்வெட்டாகும். ஆனால் இக்கோயிலின் பெயரை 1049-இல் எழுதப்பெற்ற செட்டி திருக்கோணம் கல்வெட்டு கூறுகிறது. எனவே இக்கோயில் 1049-இல் கட்டப்பட்டுவிட்டது என அறிகிறோம். இக்கோயில் முகமண்டபத்தை ஆரைப் பெருமாள் என்பவர் கட்டியுள்ளார்.

## ஸ்ரீ ராஜேந்திரசோழ விண்ணகர்

ஊரின் மேற்கில் சௌந்தரபெருமாள் கோயில் உள்ளது. இங்கு எழுதப்பெற்றுள்ள நான்கு கல்வெட்டுகளில் பழமையானது அதிராசேந்திர சோழனின் 3-ஆவது ஆண்டு (கி.பி. 1070) கல்வெட்டாகும். ஆனால் இக்கோயிலைப்பற்றிய குறிப்பும் நமக்கு செட்டித் திருக்கோணம் கல்வெட்டில் கிடைப்பதால் இக்கோயிலும் 1049 இல் கட்டப்பட்டுவிட்டது என அறிகிறோம்.

கல்வெட்டுகளில் இக்கோயில் ஸ்ரீ ராஜேந்திர சோழ விண்ணகர் என்றும், இறைவன் பெயர் அழகிய மணவாளர் என்றும்

குறிப்பிடப்படுகிறது. இப்பெயரே வடமொழியில் சௌந்தர பெருமாள் என மாறிவிட்டது.

இதிலிருந்து இராசேந்திர சோழனின் மகனான முதலாம் இராசாதிராசன் தன் தந்தை பெயரில் மதுராந்தகபுரம் என்ற நகரத்தை உருவாக்கி அங்கு அவரின் இயற்பெயரில் மதுராந்தக ஈசுவரம் என்றும், சிறப்புப் பெயரில் இராசேந்திரசோழ விண்ணகர் என்றும், தன்பட்டப் பெயரில் இரணசிங்க ஈசுவரம் என்றும், கோயில்களை கட்டினார். அத்துடன் இவ்வூரின் நாட்டுப்பிரிவுக்கும் தந்தைபெற்ற வெற்றிப் பெயர்களை சூட்டினார் என அறிகிறோம்.

## வாணிக நகரம்

மதுராந்தகபுரம் மிகப்பெரிய வாணிக நகரமாக விளங்கியது. இங்கு பெருமளவில் சங்கரப்பாடியார் (எண்ணை வணிகர்) சாலியர் (சவுளி வணிகர்) தனம் செட்டிகள் (பொன் - வைர வியாபாரிகள்) என்ற பல்வகைப்பிரிவுடைய வணிகர்கள் வாழ்ந்து வணிகம் செய்துள்ளனர்.

## பெருந்தெரு

இவர்கள் வாழ்ந்த வீதிகள் பெருந்தெருக்கள் எனப்பட்டன. இவ்வூரில் ஜனநாயகப் பெருந்தெரு என்ற தெரு இருந்துள்ளது. இன்றும் இவ்வூர் தெருக்கள் மிக நீண்டும், அகன்றும் தேரோடும் பெருந்தெருக்களாக உள்ளன.

## நகர வாரியம்

வணிகப் பெருமக்கள் அடங்கிய நகரசபை நகரவாரியம் என்றும், நகரப் பெருவாரியம் என்றும் அழைக்கப்பட்டது. இது ஊர் மற்றும் கோயில் நிருவாகத்தை கவனித்தது. இச்சபையின் உறுப்பினர் நகர வாரியன் (கவுன்சிலர்) எனப்பட்டார். இவர்கள் அவ்வப்போது கூட்டம் கூடி தீர்மானங்கள் இயற்றினர். அது வியவஸ்தை எனப்பட்டது. “மதுராந்தகபுரத்து நகரத்தோம் நகரவ்யவஸ்தை பண்ணினபடி” என்றும், “மதுராந்தகபுரத்தது

நகரத்தோம் சபாவ்யவஸ்தை பண்ணினபடி'' என்றும், ''மதுராந்தக புரத்தது நகரத்தோம் எம்மூர் மதுராந்தக ஈசுவரமுடைய மஹாதேவர் திருமுற்றத்தே கூட்டம் குறைவறக் கூடியிருந்து'' என்று குறிப்பிடும் கல்வெட்டுக்களால் இதனையறியலாம்.

## நகரக் கணக்கு

சபை நடவடிக்கைகளை எழுதிய அதிகாரி நகரக் கணக்கு எனப்பட்டார். இப்பணிக்கான உரிமை 'நகரக்கணக்குக் காணி' எனப்பட்டது. இதனை வேளாள குலத்தவர் செய்துள்ளனர். சார்த்தனூருடையான் சூரியன் கங்கை கொண்டானான ராஜ உத்தம மூவேந்தவேளான், முன்னூற்றுவன் தேவன், சூலமங்கல முடையான் கேசவன் நானூற்றுவன் போன்றோர் இவ்வூர் நகரக் கணக்குகளாகப் பணியாற்றியுள்ளனர்.

## எண்ணெய் வியாபாரிகளின் கொடை

மதுராந்தகபுரத்து ஜனநாதப் பெருந்தெருவில் வசித்த சங்கரப்பாடியார்கள் (எண்ணெய் வியாபாரிகள்) பலர் ஒன்று சேர்ந்து மதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயிலில் எழுந்தருளி யுள்ள துர்க்கைக்கு மாலை நேரத்தில் எரிய 23 சந்திவிளக்கு களையும், அர்ச்சனைக்கு நிலமும் கொடையாக கி.பி. 1054 இல் கொடுத்துள்ளனர். இத்துர்க்கையின் பெயர் கல்வெட்டில் 'இராசேந்திரதேவர் துர்க்கை நங்கையார்' எனக்குறிப்பிடப் படுகிறது.

## ஸ்ரீ புஜங்கள் வர்த்திக்க

அதிராசேந்திர சோழனின் (1067-1070) 3ஆவது ஆண்டுக் கல்வெட்டு (1070) இம்மன்னரின் ஸ்ரீ புஜங்கள் வர்த்திக்கவும் (தோளின் வெற்றிக்கு) ஊருக்கு நன்மை உண்டாகவும் வேண்டிக் கொண்டு மதுராந்தகபுரத்து நகரத்தார் இவ்வூர் இராசேந்திர சோழ விண்ணகர் கோயிலில் பல்வேறு பூசை விழாக்கள் நடத்த ஏற்பாடு செய்தனர் என்று கூறுகிறது.

## திருமேனி திருவிழா

பெருமாள்கோயிலில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளர், ஸ்ரீதேவி, பூதேவி, பெருமாள் முதலியார், இளையாழ்வான், வெண்ணைக் கூத்தர், உய்யக் கொண்டாழ்வார், திருவடி ஆகிய இறைத்திரு மேனிகட்கு அர்ச்சனை திருவமுது திருவிளக்கு ஆகிய வற்றுக்கும் சித்திரை ஐப்பசி மாதங்களிலும் உத்தரதட்சிண அயனங்களிலும் விழா நடத்த நிலக்கொடை வழங்கினர்.

## நந்தவனம்

இக்கோயிலின் பூசைக்கு மலர்கள் வழங்க ஏற்பட்ட நந்தவனம் வீரராசேந்திரதேவர் திருநந்தவனம் என அழைக்கப் பட்டது.

## தளபதி வைத்த விளக்கு

முதலாம் குலோத்துங்கனின் 11-ஆவது ஆண்டில் (1081) சேனாபதி இங்கனூருடையான் சங்கரன் கண்டராதித்தநான சேதிராயன் என்ற தளபதி இவ்வூர் மதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயிலில் ஒரு திருநந்தா விளக்கு வைத்தார். இவர் மனைவி மாதேவி அரையன் என்பவர் பிள்ளையாண்டியார்க்கு (முருகன்) ஒரு விளக்கு வைத்தார்.

## நில விற்பனை ரத்து

மூன்றாம் குலோத்துங்கனின் 17-ஆவது ஆண்டில் (1195) கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் விற்கப்பட்டன. ஆனால் நிலம் விற்ற பணம் கோயில் பண்டாரத்தில் (கருவூலம்) செலுத்தப்படவில்லை. இதனைக் கண்ட நகரசபை இந்நில விற்பனையை ரத்துசெய்து ஆணை பிறப்பித்தது. நிலங்களை மீண்டும் கோயிலுக்கே சேர்ப்பித்தனர்.

## தலையை அரிந்தான் தேர் ஓடியது

மூன்றாம் இராசேந்திர சோழரின் 18-ஆவது ஆண்டில் (1274) ஒரு நிகழ்ச்சி நடந்தது. இவ்வூர் மதுராந்தக ஈசுவரர் கோயிலில்

யாது காரணத்தாலோ பல ஆண்டுகள் பூசை விழாக்கள் வழிபாடுகள் நடக்கவில்லை. கோயில் நிலங்கள் கைமாறிப்போயின. இதனால் மீண்டும் பூசை விழா நடைபெறச் செய்ய ஒருவர் முயற்சி செய்தார். ஆனால் மக்களோ அரசோ நடவடிக்கை எடுக்கவில்லை. இதனைக் கண்ட இக்கோயில் தேவரடியார் ஆவுடை நாச்சி மகன் பஞ்சனேசுவரணன் என்பவர் தன் தலையை தானே அரிந்து கொண்டார். இதனைக் கண்ட நகரசபையும், ஊர்மக்களும் கோயில் சொத்துக்களை மீட்டதுடன் உடனே தேர்த் திருவிழா நடத்த ஏற்பாடும் செய்தனர்.

## மழவரராயரின் மானியம்

செட்டித் திருக்கோணத்து இரணேசுவரர், அம்மன் அறம் வளர்த்த நாயகி ஆகிய இருவருக்கும் திருப்பணி திருவிளக்குக்காக மருதாற்றங்கரையில் வெட்டுக் காணி இலுப்பைதோப்பு உட்பட 250 குழி நிலம் கி,பி. 1809 இல் அரியலூர் அரசர் விசைய ஒப்பிலாத மழவராயரால் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கூறும் கல்வெட்டு நடப்பட்டுள்ள நிலம் இப்போது தனியாரால் பயிரிடப்படுகிறது.

## திசைமாறிய ஆறு

இவ்வூரின் தெற்கே ஓடும் மருதையாறு, கல்வெட்டுகளில் ‘இராசேந்திர சோழப் பேராறு’ எனக் குறிப்பிடப்பெறுகிறது. இவ்வாற்றங்கரையில் இவ்வூர் நகரசபை கூடித் தீர்மானங்களும் இயற்றியுள்ளது. ஊருக்கு வளம் சேர்த்த இந்த ஆறு விக்கிரம சோழனின் 11-ஆவது ஆண்டில் (1129) ஏற்பட்ட இயற்கைப் பேரழிவால் நீர்போக்கு திசைமாறி விட்டது. நாடு முழுவதும் பஞ்சமும், நோயும் ஏற்பட்டது. விவசாயம் அழிந்தது. மக்கள் இறந்தனர். இதனை கல்வெட்டு, “இவ்வாண்டு வியாதியாலே மரித்தர் மரித்துப் போனமையாலும் இராசேந்திரசோழப் பேராறு நீர் வழக்கமின்றியே கருதின வண்ணம் பயிர் செய்ய வொண்ணாமை யாலும்” என்று கூறுகிறது. இச்சூழ்நிலையில் நகரசபை பல்வேறு வரிகளை ரத்துசெய்து ஆணை பிறப்பித்தது.

### வாய்க்கால்கள்

இவ்வூர் நிலங்களை வளம் செய்த வாய்கால்கள் பல. அவை சோழகேரளன் வாய்க்கால், சோழகுலவல்லி வாய்க்கால், சோழ பாண்டியன் வாய்க்கால், முடிகொண்ட சோழ வாய்க்கால், வானவன்மாதேவி வாய்க்கால், சோழசிகாமணி வாய்க்கால் என்ற பெயர்களைக் கொண்டிருந்தன.

### அரியலூரரான் வெட்டிய கால்

மருதாற்றிலிருந்து இவ்வூர் நிலங்களுக்கு நீர் பாய்வதற்காக பெரிய வாய்க்காலொன்றை அரியலூரைச் சேர்ந்த திருநட்டப் பெருமாள் சூரியதேவன் என்பவர் வெட்டினார். இதனை முதலாம் மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் 6-ஆவது ஆண்டு (கி. பி. 1341) கல்வெட்டு கூறுகிறது.

### பழியஞ்சிப் பேரேரி

அக்கால வணிகர்கள் நேர்மைக்குப் பெயர் பெற்றவர்கள். கொள்வதும் கொடுப்பதும் குறைவுபடாமல் வாணிபம் செய்து பொருளீட்டினர். 'வியாபாரம் துரோக சிந்தனை' என்ற கூற்றைப் பொய்யாக்கினர். பழிபாவங்கட்கு மிகவும் அஞ்சி நடந்தனர். இத்தகைய வணிகப் பெருமக்கள் தங்கள் ஊரிலிருந்து ஏரிக்கு 'பழியஞ்சிப் பேரேரி' என்ற பெயரிட்டுள்ளனர்.

இந்த ஏரி தூர்ந்து போனதால் சீரமைக்க வீட்டுக்கு ஒரு பணம் வீதம் வரி விதிக்கப்பட்டது. மேலும் நிலமுடையவர்களில் ஒரு வேலி நஞ்சை நிலமுடையவர் நாலு குழி அளவும், அதே அளவு புஞ்சை நிலமுடையோர் ஒரு குழி அளவுக்கும் ஏரியில் தூர் வார வேண்டும். நகர சபையின் இந்த சீர்திருத்த நடவடிக்கைபற்றி இரண்டாம் விக்கிரமபாண்டியனின் 4-ஆவது ஆண்டு (1348) கல்வெட்டு கூறுகிறது.

### உத்தண்டசாத்தனார்

இவ்வூரில் உள்ள ஐயனார் உத்தண்டசாத்தனார் என அழைக்கப்படுகிறார். பூரணை, புஷ்கலை ஆகிய இரு தேவியருடன்

அமர்ந்துள்ள ஐயனார் சோழர் கால அற்புதப்படைப்பாகும். இவர், இன்றும் ஆயிரக்கணக்கான சோழபுரச்செட்டியார்கள் எனப்படும் வணிக குடும்பத்தினரின் குலதெய்வமாக விளங்குகிறார். இதனருகில் அடைக்கலங்காத்தார் என்ற சாமியும் உள்ளது.

## சமண - பௌத்தக் கோயில்கள்

பதினெண்பூமி, திசைவிளங்கு நானாதேசி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர் எனும் வணிகப் பெருங்கூட்டத்தினர் சாக்கிய மதத்தையும் (பௌத்தம்), சமண மதத்தையும் பின்பற்றினர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் மதுராந்தகபுரத்திலும் ஏராளமாக வாழ்ந்துள்ளனர். இங்கு எழில்மிக்க சோழர் காலத்து சமண தீர்த்தங்கரர், புத்தர் சிலைகள் உள்ளன. இவை இங்கு பௌத்த, சமண கோயில்கள் இருந்ததைக் காட்டுகின்றன. மதுராந்தக ஈஸ்வரர் கோயிலினுள் பார்சுவதேவரின் சிற்பமொன்றும் உள்ளது.

## சோழபுரஞ் செட்டியார்கள்

ஐநூறாண்டுகள் செல்வ வளத்துடன் திகழ்ந்த மதுராந்தக சோழபுர நகரம் இன்று மறைந்துவிட்டது. இங்கிருந்த செட்டியார்கள் கும்பக்கோணம், நாகப்பட்டினம், சென்னை, தஞ்சை பகுதிகளில் குடியேறிவிட்டனர். இவர்களில் பல குடும்பங்கள் பரம்பரை கப்பல் வியாபாரிகளாகவும், சவளி, பொன் வியாபாரிகளாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவரும் தங்களை சோழபுரஞ்செட்டியார்கள் எனப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றனர். 15 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் நடந்த வலங்கை-இடங்கை சாதிச் சண்டையே இவ்வணிக ம்க்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்பதைத் திருக்கோணத்துக்கருகில் உள்ள உடையவர் தீயனூர்க் கல்வெட்டு மூலம் உய்த்துணர முடிகிறது.

## அடைக்கலம்

செட்டித்திருக்கோணத்துக் கோயிலிலுள்ள கல்வெட்டில் இவ்வூர் செட்டியார்கள் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். **நாங்கள் செய்து** வைத்த இந்த தர்மத்தை, அறத்தை காப்பாற்றுவோர் திருவடி எங்களின் தலைமேல். மேலும் இத்தர்மம் நமக்கெல்லாம் பொதுவானபடியால் இதனை அந்ததந்த காலங்களில் வாழ்பவர் களிடம் அடைக்கலமாக ஒப்படைக்கிறோம். ''அறம்மறவற்க அற மல்லது துணையில்லையே'' என்பதே அந்த வாசகம். சோழபுரஞ் செட்டியார்களின் சந்ததியினர் இத்தர்மத்தைக் காப்பார்கள் என்ற அவர்களின் முன்னோர்களின் நம்பிக்கை பொய்யாகாது என்று நம்புகிறோம்.

## திருப்பணி

மறைந்துபோன இவ்வூரின் வரலாற்றை மறையாமல் தாங்கி நிற்கும் இவ்வூர் கோயில்களின் இன்றைய நிலை இரங்கத்தக்கது. செட்டித்திருக்கோணத்து இரணசிங்க ஈஸ்வரம் முற்றிலும் அழிந்துவிடும் நிலையில் உள்ளது. பெரிய திருக்கோணத்துப் பெருமாள் கோயில் பத்தாண்டுகளாக வழிபாடின்றி கதவுகள், மண்டபங்கள் இடிந்துபோய் விட்டன. மதுராந்தக ஈசுவரன் கோயிலுக்கு ஒருவேளை பூசைதான். அறிவாரும், அரசும் ஆவண செய்தால் அழியாமற் காக்கலாம் நம் மரபை என்று சொல்வதைத் தவிர வேறென்ன செய்தல் கூடும்.

---

திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,

# அதிசெயப் பாண்டிய விண்ணக ரெம்பெருமான்

**தே. கோபாலன்**

தொல்பொருள் அலுவலர், திருநெல்வேலி

சிதம்பரனார் மாவட்டம் திருவைகுண்டம் வட்டத்தில் அமைந் துள்ளது வசவப்பபுரம் எனும் ஊர். இவ்வூருக்குத் தெற்கே 3 கி.மீ. தொலைவில் வாய்க்கால் கரையில் எழுந்தருளியுள்ளார் அருளாளப் பெருமாளாகிய வரதராஜப் பெருமாள். இவ்விறைவனை அதிசய பாண்டிய விண்ணகரெம்பெருமான், அருளாளப் பெருமாள் எனக் கல்வெட்டுகள் போற்றா நிற்கும்.

இக்கோயிலின் உண்ணாழிகையும், அர்த்தமண்டபமும் பிற்காலப் பாண்டியர் கலைப்பாணியைச் சேர்ந்தவை. மாமண்டபம் மற்றும் முன்மண்டபம் நாயக்கர் காலத்தில் எடுக்கப்பட்டனவாகத் தோன்றுகின்றன.

உண்ணாழிகையில் அருளாளப் பெருமானார் தன்னிரு தேவி யருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். கருடாழ்வார் தன்கோயில்விட்டு மாமண்டபத்தில் பெருமாளை நோக்கிய வண்ணம் உள்ளார். (பெருமாளைக் காணா நாளெல்லாம் பிறவா நாளேபோலும் அவருக்கு). அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறமும் திருவாயிலோர் (துவாரபாலகர்) சிற்பங்கள் எச்சரித்து நிற்கின்றன. இவையனைத்தும் பிற்காலப் பாண்டியர் கலைப் பாணியை எடுத்தியம்புகின்றன. மாமண்டபத்தின் வடபால் உள்ள திருமங்கை மன்னர், இராமானுசர், விசுவத்சேனர் சிற்பங்கள் நாயக்கர் கலைக்கோர் எடுத்துக்காட்டு.

இக்கோயிலின் வெளித்திருச்சுற்றில் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (கி. பி. 1180), முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1190 - 1218) ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இரண்டும், இன்னதென அறிய இயலா பொறிந்து போன கல்வெட்டொன்றுமாக மூன்று கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன.

இவற்றுள் விக்கிரம பாண்டியன் கல்வெட்டு இவ்விறைவனை அதிசெயப்பாண்டிய விண்ணக ரெம்பெருமான் அருளாளப் பெருமாள் என்றும், அவருக்கு இவ்வரசன் தனது 12-ஆம் ஆட்சி யாண்டில் திருவிடையாட்டத்திற்கு இராசசிங்க நல்லூரில் நிலக் கொடை அளித்தான் என்றும் குறிக்கிறது. இக்கல்வெட்டில் குறிக்கப் பெறும் இராசசிங்க நல்லூர்; வசவப்பபுரத்திற்கு தெற்கே 5 கி. மீ. தொலைவில் உள்ள செய்துங்க நல்லூராக இருக்கலாம். சேரன் வாய்க்கால் எனக் குறிப்பிடப்படுவது தற்போது கோயிலுக்கருகில் செல்லும் வாய்க்காலாக இருக்கலாம். அதேபோன்று குலசேகர மாயலூர் எனக் கல்வெட்டில் வரும் ஊர் குலசேகரப் பாண்டியன் பேரால் அமைந்த ஊராகலாம் எனக் கருத இடம் தருகிறது.

சடையவர்மன் குலசேகர பாண்டியனது கல்வெட்டு இவன் தந்தை விக்கிரமபாண்டியன் கல்வெட்டுக்கருகில் "பூதலமடந்தை" என்ற மெய்க்கீர்த்தியை மட்டுமே பெற்று நிற்கிறது. இக்கல்வெட்டுக்களைக் கொண்டு இக்கோயில் விக்கிரமபாண்டியன் காலத்திலோ அதற்குச் சற்று முன்போ கட்டப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

---

# பேரங்கியூர் திருமூலத்தானமுடையார்

**கி. ஸ்ரீதரன்**
பதிவு அலுவலர், திருச்சி

தென்னார்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில், விழுப்புரத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது பேரங்கியூர். இதில் எழுந்தருளியுள்ள இறைவன் திரு மூலத்தானமுடையார். இக்கோயில், உண்ணாழிகை, அரை (அர்த்த) மண்டபம், முகமண்டபங்கொண்ட சிறுகோயில். பராந்தகன், இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன், குலோத்துங்கன் போன்ற சோழ அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களில் காலத்தால் முற்பட்ட பராந்தக சோழன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம்.

இவ்வூர், பேரீங்கூர் என்றும் இக்கோயில் இறைவன் ஸ்ரீ மூலஸ்தானமுடையார் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இஃதோர் பிரம்மதேய ஊர் என்பது "இராசேந்திர சோழ வள நாட்டு திருமுனைப்பாடி நாட்டு பிரம்மதேயம் பேரீங்கூர் ஸ்ரீ மூலஸ்தானமுடையார்" என வரும் முதல் இராசேந்திரன் கல்வெட்டாலும், பிறவற்றாலும் அறியலாம்.

பராந்தக சோழன் கல்வெட்டு ஊர்ச்சபையார் நிலம் விற்றமையையும், முதலாம் இராசராசன் காலக் கல்வெட்டு நொந்தா விளக்குக் கொடை அளித்ததையும், குறிப்பதோடு கோயிற் பணிகளை நிருவகிக்க "ஸ்ரீ ருத்ர கண பெருமக்கள்" அமர்த்தப்பட்டதையும் குறிக்கிறது. இவர்கள் "ஸ்ரீ ருத்ர மகேஸ்வரர்" (திருக்கழுக்குன்றம், திருமணஞ்சேரி, பிரான்மலை) எனவும், "உருத்திர கனப்பெரு மக்கள்" (திருவாமாத்தூர்) எனவும் அழைக்கப்பெற்றுள்ளனர்.

உண்ணாழிகைத் தேவகோட்டங்களில் பிள்ளையார், ஆலமர்ச்செல்வன், துர்க்கை ஆகிய சிற்பங்கள் சிறப்பாக

உள்ளன. அவற்றுள், பிள்ளையார் திருக்கோலத்தில் வழக்கத்திற்கு மாறாக மேற்கைகளில் ஒரு கையில் அங்குசமும், மறுகையில் மானும் வைத்திருப்பது புதுமையாக உள்ளது. ஆலமர்ச் செல்வன் உருவம் அழகு வாய்ந்த ஒன்று.

கோயிலைச் சுற்றி தாய்மார் எழுவர் (சப்தமாதர்) சண்டேசுவரர், சேட்டை, தனியம்மன் முதலான சிற்பங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளன.

உண்ணாழிகையின் மேலைச் சுவரின் அதிட்டானப் பகுதியில் அளவுகோல் ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இன்றைய அளவையில் இக்கோல் 306.5 செ.மீ. நீளமுடையது. இவ்வூர் நில அளவைக் கோலாக இஃது இருக்கலாம்.

பேரங்கியூர் மூலத்தானமுடையார் கோயில் சிறிதாயினும் அதன் வனப்பும், வரலாறும் பெரிது. அப்பெருமையே இதனை தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை தன் வரலாற்றுச் சின்னங்களுள் ஒன்றாகப் பேணிவரச் செய்கிறது.

---

# புரவலன் சேதுபதி

**ச. பரணன்**

காப்பாட்சியர், இராமலிங்க விலாசம்

ஈவார்கண் என்னுண்டாந் தோற்றம் இரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை

என்பது வள்ளுவம். இதனை அறிந்தோ அறியாமலோ ஆட்சிக் கட்டில் ஏறியோர் பண்டுமுதல் இன்றுவரை கொடையைத் தம் கடமையாகக் கொண்டனர். இதற்கு விதிவிலக்கல்லர் சேது மன்னர்களில் சிறந்தவரான முத்துராமலிங்க சேதுபதி. பண்டை மன்னர் புலவர்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும் வரையாது வழங்கினர். வரலாற்று நோக்கில் புலவரொடு கோயில்களும் சேர்ந்தன. அவை இதோ!

**1) மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு அளித்த நிலக்கொடைகள்**

| | |
|---|---|
| 1. வெங்களக் குறிச்சி | 2. பனிந்த ஏந்தல் |
| 3. தொண்டைமான் ஏந்தல் | 4. அலுப்பனேந்தல் |
| 5. புளுகனைக்குண்டு | 6. தொட்டியன் குளம் |
| 7. குரங்கனைக் குளம் | 8. கூவர் குளம் |
| 9. குறிஞ்சாக் குளம் | 10. கீழ ஓடைக் குளம் |
| 11. கீழக் கள்ளிக் குளம் | 12. மேல ஓடைக் குளம் |
| 13. வெள்ளக் குளம் | 14. சிறு வேப்பங்குளம் |

**2) திருப்புல்லாணி தர்ப்பாசனம் அழகியார் கோயிலுக்கு அளித்தன :-**

| | |
|---|---|
| 1. நெல்லியம்பதி | 2. உப்பாளக்குடி |
| 3. தச்சங்குளம் | 4. அனிகுருந்தான் |
| 5. பாம்பு விழுந்தான் | 6. நாவல் கரையான் |

**3) திருவிராமேசுவரத்திற்கு அளித்தன :-**

| | |
|---|---|
| 1. பள்ளக்குளம் | 2. நிலமழகியமங்கலம் |

**4) திருவுத்திரகோசமங்கைத் திருக்கோயிலுக்கு அளித்தன :-**

1. வித்தானூர் 2. காராம்பல் 3. பரந்தன்

**5) சேதுபதியைப் பாடியோரும், பாடியோர் பெற்ற ஊரும் :-**

| புலவர் பெயர் | | பரிசலாகப் பெற்ற ஊர் |
|---|---|---|
| 1. மீர் சவ்வாதுப் புலவர் | — | சுவாத்தன் கிராமம் |
| 2. சங்கரப் புலவர் | — | உளக்குடி |
| 3. முத்தையாப்புலவர் | — | ஊரணிக்கோட்டை |
| 4. கங்கமுத்துப் பிள்ளை புலவர் | — | பொது ஏந்தல் |
| 5. மாசிலாமணிப் புலவர் | — | அனுமந்தக்குடி ஊரின் ஒரு பகுதி |

# கன்னிமார் சுனை

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்பொருள் அலுவலர், சிதம்பரம்

தருமபுரி (தகடூர்) மாவட்டம், தருமபுரி வட்டத்தில், தருமபுரி, காரிமங்கலம் சாலையில் அமைந்துள்ள ஊர் பெரியாம்பட்டி. இவ்வூரின் மேற்கே ஐந்து சுனைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று கன்னிமார் சுனை என்றழைக்கப்படுகிறது. இது தோற்றுவிக்கப் பட்ட சுனை எனினும் எக்காலத்தும் நீர் ஆறாத் தன்மையது. கன்னிமார் என்பதால் எழுவர் தாயராய சப்த கன்னிகட்கும் இதற்கும் தொடர்பில்லை. மாறாகக் கலந்தொடா மகளிர் குளிப்பதற்கென்றே இச்சுனை பயன்பட்டு வருவதால் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

மகளிர் நீராடுவதற்கென்றே அமைந்த இச்சுனையில் பல் சமயக் கடவுட் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளமை வியப்பளிக்கிறது. இங்கு சைவத்தைக் குறிக்கும் வலம்புரிப் பிள்ளையார், முத்தலை வேல் (சூலம்) நந்தி, சூரியன், பிறை, ஆகியனவும் வைணவத்தைக் குறிக்கும் வண்ணம், வணங்குங் கோலத்தில் அநுமன், கருடன் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

சுனையின் மேற்புறம் இரண்டு சோடி திருவடிகளும், திருவடியின் இருபக்கங்களிலும் இரு சக்கரங்களும், கீழ்ப்பகுதியில் இரு சக்கரங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றின் நடுவில் தாமரை மலர் செதுக்கப்பட்டுள்ளது. இவை புத்த மதத்தோடு தொடர்புடையனவாக இருக்கலாம். அதற்கேற்றவாறு இப்பகுதியில் பௌத்த சிற்பங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்சமய நோக்கில் வெட்டப்பட்ட இச்சுனையின் அருகில் வெட்டப்பட்டக் கல்வெட்டு சிதைந்துவிட்டதெனினும் சிற்ப அமைதி கொண்டு இச்சுனை கி.பி. 15, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருத வாய்ப்புள்ளது.

———

# தமிழகத்தின் ஏரிகள்

## சில வரலாற்றுக் குறிப்புகள்

**கொடுமுடி ச. சண்முகம்,**
செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, விழுப்புரம்.

பொதுப்பணித்துறை என்பது ஒரு காலத்தில் முழுக்கப் பொறியியல் பணித்துறையாக இருந்தது. அக்கால சென்னை மாநிலத்தின் (மெட்ராஸ் பிரசிடென்சியின்) தலைமைச் செயலாளரே பொறியாளராக இருந்த காலமும் உண்டு. காலப் போக்கில் பொதுப்பணித்துறை பல கூறுகளாகப் பிரிந்து தற்போது பாசனமும், கட்டடமும் மட்டும் பொதுப்பணித்துறையிடம் நிற்கின்றது தற்போதைய பொதுப்பணித்துறை ஒரு நூற்றாண்டு காலத்தைக் கடந்துள்ளது.

பொறியியல் பணிகளுக்கு கால எல்லை ஏதுமில்லை. குறிஞ்சி நிலத்து மனிதன் கரடுகளில் வாழ்ந்த காலத்திலேயே பொதுப்பணி தொடங்கிவிட்டது. ஆதி மனிதனின் கல்வீடுகள் கிருட்டிணகிரி, கொல்லிமலை போன்ற இடங்களில் கரடுகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளமையே இதற்குச் சான்று. ஏறத்தாழ பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னம் கட்டப்பட்டக் கல்வீடுகளில் 100 சதுர அடிக்கு மேலான பலகைக் கற்களை நான்கு புறமும் நிறுத்தி தரைக்கு ஒரு பலகைக் கல்லும், சுரைக்கு ஒரு பலகைக்கல்லும் போடப்பட்டன. பாறை மீது எந்தப்பிடிப்பும் இல்லாமல் அவ்வீடுகள் நிற்கின்றன. கருவிகளே எதுமில்லாத காலத்தில் சுமார் 3 டன் எடையுள்ள கல்லை சுமார் 8 அடி உயரத்தில் எவ்வாறு தூக்கி வைத்தனர் என்பது வியப்புக்குரிய செய்தியே. பாறை மீது விலங்கின இறைச்சிகளைச் சுடுவதற்கு மூட்டிய தீ, பாறையைப் பலகைக் கல்லாக வெடிக்க வைத்தது. அக்கற்களைக் கொண்டு வீடு கட்டி வேட்டையாடி வாழ்ந்தான். இறந்தவர்களுக்குத் தரைக்குள்ளும் கருங்கல் வீடு கட்டிப் புதைத்தனர். அதனாற்றான் இறந்தவர்களை வீடு புகுந்தனர் என்று தமிழில் வழங்குகிறோம்.

கரடுகளின் அருகே குன்றுகளில் அகல்விளக்குப் போன்ற அமைப்பு சிறு வழிவிட்டுச் சுற்றிலும் மேடாக அமைந்துள்ளது.

சிறுவழியில் கல்லையும், மண்ணையும் இட்டு நிரப்பினால், எளிய முயற்சியில் குட்டை கிடைத்து விடுகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் நின்று, வாழ வழியமைக்கின்றது. அன்று தொடங்கி படிப்படியாக நீர்க்குட்டைகள், ஏரிகள், கட்டுக் குளங்கள், அணைக் கட்டுகள் அனைத்தும் தோன்றி வளர்ந்தன.

காவிரியில் கல்லணையைக் கட்டித் தண்ணீரைப் பல கால்வாய் களாகப் பிரித்தான் கரிகாலன். கல்லணைக்குப்பின் உள்ள ஆறு, கொள்ளிடம் என்று பெயர் பெற்றது. வெட்டிய கால்வாய்களில் ஒன்று காவிரி எனப் பெயர்பெற்றது. பாசனத்திற்கு பயன்பட்ட தோடு பூம்புகாருக்குக் குடிநீர் வழங்கும் ஊற்றாகவும் ஆயிற்று. இதன் அடிப்படையில் ஏரிகள் வெட்டவும், மதகுகள் அமைக்கவும் தலைப்பட்டனர். அதனைக் கல்லிலும் பொறித்தனர். பெரியார் மாவட்டத்தில் ஈரெட்டி மலைக் கரட்டுப் பகுதியில் ஒரு கருங்கல் கிடைத்துள்ளது. அது ஏரிமதகை அடைக்கும் கல். அதில் ''துறகையுள்ளாறு கல்'' என இரண்டாம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்து காணப்படுகிறது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கேத்த நாயக்கன் புதூரில் ஏரி மதகு அருகில் ஏழாம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று உள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்தில் 86 மில்லியன் கன அடி கொள்ளும் பனமலை ஏரி கி.பி. 700 வாக்கில் இராசசிம்மப்பல்லவனால் அமைக்கப்பட்டது.

ஓங்கூர் ஏரி கி.பி. 745-ஆம் ஆண்டில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சேத்தன் மகன் தாழன் என்பவனால் அமைக்கப்பட்டது. இத்தகைய கல்வெட்டுகள் தொடர்ந்து பல ஏரிகளில் கிடைக்கின்றன.

ஏரிகளில் தற்போதைய மதகின் அருகில் கரையின் உள்வாயிலில் தென்படும் இரண்டு கற்களுள் ஒன்றிலும், உள்வாய் அருகில் தென்படும் சிறிய பலகைக் கற்களிலும் எழுத்துக்கள் காணப்படும். அவை அனைத்தும் தமிழ் எழுத்துக்களே.

இக்கல்வெட்டுக்களைப் படிப்பதால் என்ன நன்மை எனக் கேட்கத் தோன்றும். சாதாரணமாக இந்த ஏரியை எப்போது கட்டினார்கள் என்று யாரையாவது கேட்டால் எங்கள் தாத்தா

காலத்திலிருந்து இருப்பதாகச் சொல்லுவார்கள். 200 ஆண்டு எனப் போட்டுக் கொள்ளத் தோன்றும். எனினும் அக்கால மக்கள் எழுதி வைத்தனர். தற்காலத்தில் நமக்கு வரலாற்று உணர்வு அற்றுப் போய் விட்டதால் அன்று எழுதி வைத்ததைக் கூட அறிந்து கொள்ள விரும்பாமல் இருக்கின்றோம்.

நல்ல வேலையாக இம்மதகுகளின் உள்வாய் கரையிலிருந்து சற்றே உள்ளே தள்ளியிருப்பதால் அவை இன்னும் பாதுகாப்பாக உள்ளன. புதுக்கோட்டை வட்டாரத்தில் இத்தகைய கல்வெட்டு களை நமது பொறியாளர்கள், புதிய மதகில் வைத்துக் கட்டியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் மகளிர் துணி துவைக்கும் கல்லாகவும் பயன்படுகின்றது. கட்டுக் கல்லாகப் பயன்படுத்துவதும் உண்டு. கருங்கல் வேலை செய்யப் போகும் கல்தச்சர்கள் இவற்றை உடைத்துக் கட்டடத்தில் வைத்து கட்டும் வாய்ப்பே மிக அதிகம். இவ்வகை அழிபாடு களிலிருந்து இவற்றைக் காக்க வேண்டியது இன்றைய அவசரத் தேவையாகும்.

தற்காலம் 60 செ.மீ. × 60 செ.மீ. மதகுச் சுரங்கம் கட்டுகிறோம். ஒரு காலத்தில் இம்மதகு ஓரடி அகலத் துளையாக இருந்துள்ளது. "மடையும் அடைத்துத் தூம்பும் செய்வித்தான்" என்ற வாசகம் அடிக்கடி காணப்படுகிறது. மடையில் கெட்டியாக மூடுவதற்காக ஏற்பாடு இல்லாமல் இருந்தது. பின்னர் அவை தூம்பாக மாற்றிக் கட்டப்பட்டுள்ளன. செங்குத்தான சேத்தடிக் கல்லும், கிடைமட்டமான துளைக் கல்லும் பின்னர் இடம் பெற்றன. இக்காலத்திலும் இது தொடர்கின்றது. பம்பரவகை மரக்கட்டை அடைப்பான் புழக்கத்திற்கு வந்துள்ளது.

சுரங்கம் பெரும்பாலும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. பத்திக் குறுக்க வகை மூடமைப்பு பெரும்பாலும் இருந்துள்ளது. சாய்மானச்செங்கல் வளைப்பு பின்னர் வழக்கத்தில் வந்துள்ளது.

மதகின் உள்வாய் இரட்டை தூண்களில், துளைமூடும் கல்லின் இரும்புச் சட்டம் நிற்கும் வகை குறுக்குப் பலகைகள் போடப்பட்டு அழகாகவும், அலங்காரமாகவும் அமைக்கப்பட்டன. மதுரையிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள திருவாதவூர் ஏரியில் மதகுக் கம்பங்களின் மீது ஒரு புருஷா மிருகச் சிலை செதுக்கப்பட்டுள்ளது. நாமக்கல் அருகில் தூசூர் ஏரி மதகுக் கல் மீது நந்தி வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

பிடாகம் ஏரி உள்வாய் மண்டபம் போல் அமைக்கப்பட்டிருந்தது. தற்போது புதுப்பித்துக் கட்டும் வேலைக்காக அது பிரித்துப் போடப்பட்டு விட்டது. அவலூர்பேட்டை ஏரி மதகிலும் மண்டபம் போன்ற கட்டடம் உள்ளது. ஒசூர் ஏரி மதகு கோயில் கட்டுமானம் போல செதுக்கிக் கட்டப்பட்டுள்ளது.

தரையில் செங்கற்களைப் பரப்பிக் கலவையிட்டு மேல் வரிசையும் பரப்பி அடிமானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. செங்கற்சல்லியும், சுண்ணாம்பும் கலந்த காரை இன்றும் இடிக்க இயலாவண்ணம் கெட்டியாக உள்ளதைக் காணலாம்.

ஏரிகளின் **கழிங்கல்** கட்டுமான வேலை மிகச் சிறப்பாக உள்ளன. பெருங்கற்களை ஒன்றன் மீது ஒன்றை அடுக்கி கழிங்கல் அமைக்கப்பட்டுள்ளன. கீழே துண்டுக்கல் போட்டு மேற்பரப்பு மட்டும் பலகைக் கற்கள் பரப்பியும் அமைக்கப்பட்டுள்ளன. துரிஞ்சலாற்று அணைக்கட்டுகளிலும் அவலூர் பேட்டை ஏரியிலும் இவ்வகை கட்டுமானம் உள்ளது.

பண்டைத் தொழில் நுட்பம் பற்றிய செய்திகளை அறிந்து வைக்கவும், அரிய தகவல்களைத் திரட்டி வைக்கவும் தமிழ்நாட்டில் உரிய ஏற்பாடு எதுவும் தற்போது இல்லை. தமிழக அரசிலும், நடுவணரசிலும் தொல்லியல் துறைகள் இருந்தபோதிலும் அவற்றின் பணிகளில் பண்டையத் தொழில் நுட்பம் கடைசி இடத்தையே பெறுகிறது. நெடுஞ்சாலைகள் பற்றி ஏதேனும் அறிய வேண்டுமாயின், யாரும் அத்துறைத் தலைவரை நாடுமாறு அறிவுறுத்துவதே இயற்கை. அதேபோன்று ஏரிகளைப்பற்றி அறிய வேண்டுமாயின் பொதுப்பணித்துறையை நாடுவதே இயற்கை.

தமிழ்நாட்டில் மிகப் பழமையான ஏரி எது? மிகப்பெரிய ஏரி எது? நூற்றாண்டுவாரியாக எத்தனை ஏரிகள் உள்ளன? அவற்றின் தொழில் நுட்பம் எவ்வகையானது? என்பதை எல்லாம் துள்ளியமாக அறிதல் இன்றியமையாதது.

நல்லவேலையாக அண்மையில் மய்ய நீர் ஆணையம் இம் முயற்சியினை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டுச் செய்திகளை வழங்குவதற்காக, சென்னையிலுள்ள வட்டார வடிவமைப்பு கண்காணிப்புப் பொறியாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு உதவி செய்யவும் நிலையான செய்திகளைத் தொகுத்து வைக்கவும் ஒரு வரலாற்று பிரிவு உடனடித் தேவையாகும்.

பொதுப்பணித்துறையில் கட்டடக் கோட்டம், மண்விசையியல் கற்காரைக் கோட்டம், நீர்நிறுவனம், நீரியல் மற்றும் நீர்விசையியல் கழகம், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், பாசனப் பெருக்கத்திற்கான உயர்நிலைக்குழு ஆகியவை உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் பண்டைப் பொறியியல் வரலாற்று ஆய்வு மையமும், அதனை ஒட்டிய அருங்காட்சியகமும் அமைய வேண்டும். வரலாற்றுச் சான்றுகள் காலத்தை வெல்லும் திறனற்றவை. பசுமைப் புரட்சியின் கூறாக பழையன அழிதலில் வேகம் கூடியுள்ளது. அவை முற்றும் அழியுமுன்னர் விழித்துக் கொள்ளல் அவசியமானது; அவசரமானது.

———

# அறமறவேல் அறமல்லது துணையில்லை

**கு. தாமோதரன்**
துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

செங்கை அண்ணா மாவட்டம் மதுராந்தகத்திலிருந்து படாளம் செல்லும் நெடுஞ்சாலையில் 12 கிலோமீட்டர் தொலைவில் பழையனூர் அமைந்துள்ளது.

இவ்வூரின் வட பகுதியில் திருமாகாளீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயில் கல்வெட்டில் இவ்வூர் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து வட பிடாகை பழனையூர் என்று குறிக்கப் படுகிறது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் ஸ்ரீ திருமாகாள தேவர் என்று குறிக்கப்படுகின்றார். கோயிலின் திருச்சுற்று முழுவதுமாக இடிந்துவிட்டது. சோழர் காலத்தைச் சார்ந்த அழகு வாய்ந்த நந்தியம்பெருமாள் கோயிலுக்கு வருபவர்களை வரவேற்கின்றார்.

நந்தியின் முன் உள்ள நான்கு பட்டைத் தூணின் மூன்று பக்கங்களில் சோழமன்னன் முதலாம் இராசராசனின் 17 ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1002) கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியது இதுவேயாகும் (இக்கல்வெட்டு முதன் முதலில் இக்கட்டுரை ஆசிரியரால் கண்டுபிடிக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது).

இக்கல்வெட்டு இரண்டு பகுதிகளாகப் பொறிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதி திருமாகாள தேவர்க்குச் சந்திராதித்தவரை இரண்டரை திருநொந்தாவிளக்கு எடுப்பதற்கு இருநூற்று இருபத்தைந்து சாவாமூவாப் பேராடுகளை மூலதாசராகிய பிச்சன் என்பவன் வழங்கியதாகக் குறிப்பிடுகிறது. ஒரு விளக்கெரிப்பதற்கு வேண்டிய நெய்க்காக 90 ஆடுகள் மேனி இரண்டரை விளக்கெரிக்க 225 ஆடுகள் அளிக்கப் பெற்றுள்ளது.

இறைவனுக்கு விளக்கெரிப்பது என்பது சிறந்த அறமாகக் கருதப்பட்டுள்ளது. எனவே இந்த தர்மத்தை இரக்சிப்பார் ஸ்ரீ பாதம் என் சிரசின் மீது, இந்த அறத்தை மறவேல், அறமல்லது வேறு துணையில்லை என்று அறத்தின் சிறப்பினைக் கல்வெட்டு "அறமறவேல் அறமல்லது துணையில்லை" என்று மிகவும் அழகாகக் குறிக்கிறது.

இரண்டாவது பகுதி ஸ்ரீதிருமாகாள தேவர்க்கு ஊற்றுககாட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு வான்பாக்கத்து இருக்கும் மன்றாடி மாங்காயன் வேங்கடவன் மகன் குட்டன் என்பவன் ஸ்ரீ திருமாகாள தேவர்க்கு அரைதிருநொந்தா விளக்கு எரிப்பதற்கு நாற்பத்தைந்து ஆடுகள் அளித்தமை குறிக்கப்படுகிறது. மும்முடிச் சோழன் என்பது முதலாம் இராசராசனின் பட்டப் பெயர்களுள் ஒன்றாகும்.

கோயில் உண்ணாழியின் அடிப்பட்டையில் முதலாம் இராசராசனின் 24 ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1009) கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. எனவே முதலாம் இராசராசன் காலத்திலோ அல்லது அதற்கு முன்னரோ இக்கோயில் வழிபாட்டில் இருந்திருக்க வேண்டும். உண்ணாழியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டுதான் அக்கோயில் கட்டப்பட்ட காலத்தைப் பொதுவாக கணிப்பது வழக்கம். சில சமயங்களில் கட்டடக் கலைப் பாணியைக் கொண்டும் கணிப்பதுண்டு.

. கோயிலில் அர்த்தமண்டபத்தில் தெற்குப் பக்க சுவரில் உள்ள கல்வெட்டு "இக்கோயிலைக் கற்றறியாகச் செய்தான் பாகைமய்(ய) பானைசாத்தன்" என்று குறிக்கிறது. இந்தக் கல்வெட்டில் அரசனின் பெயர் குறிக்கப்படவில்லை. இருந்தாலும் கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு முதலாம் இராசராசன் காலத்தைச் சார்ந்தது எனலாம். எனவே முதலாம் இராசராசன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இக்கோயிலில் 2-ஆம் இராசராசனின் 19-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இராசராசன் இக்கோயிலுக்கு பல கொடைகளை அளித்து இருக்கின்றான் என்பது தெரியவருகிறது. கோயிலின் தென் பக்கச் சுவர் கோட்டத்தில் உள்ள தட்ச்சணாமூர்த்தி சிற்பமும் இரண்டாம் இராசராசன் காலத்தைச் சார்ந்தவாகும்.

முதலாம் இராசராசன் நுளம்பாடியை வெற்றி கொண்டதைத் தன்னுடைய மெய்க்கீர்த்தியில் கூறிக்கொள்கிறான். இதற்கு அடையாளமாக நுளம்பர் கலைப்பாணியைச் சார்ந்த 'மகிஷாசுரமர்த்தினி' சிற்பத்தினைக் கொண்டு வந்துள்ளான். இச்சிற்பமும் இந்த கோயிலில் வழிபாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இத்துடன் இங்குள்ள சண்டிகேஸ்வரர், விநாயகர் சிற்பங்கள் சோழர்களின் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

தொண்டை மண்டலத்தில் "தூங்காணை மாடக் கோயில்களுக்கு' குறைவில்லை. இது தொண்டை மண்டலத்திற்குரிய சிறப்பாகும். திருவேற்காடு, திருமுல்லைவாயில், திரிசூலம், திருப்பருத்திக்குன்றம், திருத்தணி, மாகறல், கூரம், மாமல்லபுரம் (சகாதேவரதம்) ஆகிய ஊர்களில் தூங்காணைமாடக் கோயில்களைக் காணலாம். இவற்றுள் பழையனூரில் உள்ள மகாளீஸ்வரர் கோயிலும் அடங்கும். கோயிலின் உண்ணாழிப் பகுதியின் மேற்பகுதி, கொடுங்கைப் பகுதி வரை கருங்கல்லாலும், அதற்கு மேல் செங்கல்லாலும், சுண்ணாம்பாலும் கட்டப்பட்டுள்ளது. கொடுங்கைப் பகுதியில் உள்ள கூட்டு பகுதியினைப் பல்வகை உருவங்கள் அழகு செய்கின்றன. விமானத்தின் முன் பகுதியில் சுதையினால் ஆன சிம்மத்தின் தலைப்பகுதி பிதுங்கிய விழிகளுடனும் நீண்ட கோரைப் பற்களுடன் வடிக்கப்பட்டுள்ளது. சிகரப் பகுதியினை இரண்டு பக்கங்களிலும் பெரிய அளவில் மனித உருவங்கள் தாங்கி நிற்கின்றன. சிகரத்தின் மீது சுதையினால் செய்யப் பெற்ற மூன்று கலசங்கள் உள்ளன. இந்த சுதை வேலைப் பாடுகள் நாயக்கர் காலக் கலைப் படைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

மகாளீஸ்வரர் கோயில் நடராசர் மண்டபம் வட்ட வடிவமான தூண்களினால் கட்டப்பட்டுள்ளது முதல் தூணின் அடிப்பகுதியில் மூன்று உருவங்கள் ஒரே வரிசையில் நின்ற நிலையில் இறைவனை வணங்குவது போன்று காட்டப்பெற்றுள்ளது. இந்த மூன்று உருவங்களில், பெண்ணின் உருவம் சற்று உயர்ந்த உருவமாக காட்டப்பட்டுள்ளது. மற்ற இரண்டு ஆண் உருவங்களும் சற்று சிறிய அளவில் உள்ளன. இந்த மூன்று உருவங்களும் குந்தவை, இராசராசன் இராசேந்திரன் ஆகியோரின் உருவங்களாக இருக்கலாம். இந்த மண்டபத்தில் சுரங்கம் ஒன்று உள்ளது. இதனை ஆய்வு செய்தல் வேண்டும். நடராசர் மண்டபத்தின் நுழைவாயிலின் மேல் பகுதியில் இம்மண்டபத்தைக் கட்டியவனின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பும், கலை அழகும் வாய்ந்த இக்கோயில் தற்போது பாழடைந்து கவனிப்பாறற்று காணப்படுகிறது. இதனை பாதுகாப்பதும், பராமரிப்பதும், தூய்மையாக வைத்துக் கொள்வதும் இவ்வூர் மக்களின் அறமாகும்.

---

# RELATIONSHIP BETWEEN VARIOUS PARAMETERS IN TANK TECHNOLOGY

**Kodumudi S. A. Shanmugam,**
Executive Engineer, P.W.D., Villupuram.

**Introduction**

"Stone Jail" is the term given to the Anicuts constructed across a river since it resembles actual jail. These Division works collects water flowing through the river in the nearby tanks. Instead of raising the level in the river itself, our ancestors found it convenient to store the flood waters in the adjacent tanks. In ancient days, the rainfed Noyyal river was said to have 96 Anicuts feeding a series of Tanks. Thus the tanks fed through anicuts were called system tanks and the other tanks receiving rain water direct were called non-system tanks.

**Sources in South Arcot District**

In South Arcot District, River Thenpennai, wrongly worded in all our Irrigation maps as Ponniyar, was once flowing for considerable days during the year. During the current year, it received water only for 36 hours at the rate of 3000 cusecs The other rivulets are Varahanadhi, Sankaraparani, Gadilam, Thurinjalaru all find their significance only in the map. Hence there is absolutely no difference between the system tank and non-system tank.

**Age**

During 1978, I located an inscription of seventh century in Omalur Taluk of Salem District. In South Arcot District the Ongur tank has an inscription

of 745 A.D. The Panamalai Eri was formed during 710 A.D. I have located many inscriptions of all ages in the Tanks, in South Arcot District. It is to point out that any analysis of the Irrigation sources of Tamil Nadu will have the bearing of the Technology of the ancient times.

**Parameters**

Bund and water spread are two components deciding capacity of the tank which in turn decides the ayacut. Sometimes, number of fillings forms another instrument influencing the relationship between capacity and ayacut. Number of fillings is very uncertain and hence in this study, it has been omitted.

**Data**

To find certain relationship between water spread, capacity, Bund length and ayacut, tanks in the Villupuram Division territory of Public Works Department are considered as follows:

| | Non-System | System | Total |
|---|---|---|---|
| Gingee | 42 | — | 42 |
| Tindivanam | 122 | — | 122 |
| Vanur | 34 | — | 34 |
| Villupuram | 124 | 24 | 148 |
| Thirukovilur | 37 | 38 | 75 |
| Ulundurpet | 45 | — | 45 |
| Total | 404 | 62 | 466 |

All the tanks are above 100 Acres of ayacut and belong to Public Works Department. Panchayat Union tanks and Ex-Zamin sources are not considered for this analysis.

### Relationship

The following relationships are worked out for each taluk separately. System and Non-System tanks are considered separately.

| | | |
|---|---|---|
| a) | Waterspread | Ayacut |
| b) | Ayacut | Capacity |
| c) | Waterspread | Capacity |
| d) | Bund length | Capacity |
| e) | Bund length | Water spread |
| f) | Bund length | Ayacut |

Average figures were calculated for all the taluks and final average of the above figures were also worked out.

### Results & Analysis

The final average is seen as follows:

| | | |
|---|---|---|
| Waterspread/Ayacut | - | 0.75 |
| Ayacut/Capacity | - | 231 Hectare/m.cum |
| Waterspread/Capacity | - | 133 Hectare/m cum |
| Bund length/Capacity | - | 4858 metre/m.cum |
| Bund length/Water spread | - | 37.5 metre/Hectare |
| Bund length/Ayacut | - | 23.35 Metre/Hectare |

These figures may be considered as basic figures guiding the formation of new tanks. In Villupuram, Vanur is the only tank situated along the sea coast. Gingee is mostly hill tract receiving scanty rainfall. Tindivanam is in between Gingee and Vanur having both effects. Villupuram and Tirukoilur are partly having 'system tank' receiving water through Thenpennayar. Ulundurpet is also a dry taluk, though the influence of Gadilam is there in few parts. Variation in these aspects, along with rainfall statistics can be studied from the available data, in due course of time.

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு,
இத்துறை இயக்குநருக்காக திரு. க. குழந்தைவேலன், கல்வெட்டாய்வாளரால்
வெளியிடப்பெற்றது.